




கேரளாவில் வைக்கம் பகுதியில் பெரியார் நினைவகத்தில் நடைபெற்று வரும் சீரமைப்புப் பணிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு செய்தார். கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம், வைக்கம் பகுதியில் தந்தை பெரியார் அறப்போராட்டத்தில் ஈடுபட்டு, வெற்றி கண்டதன் நினைவாக, தமிழ்நாடு அரசு சார்பில் 70 செண்ட் பரப்பில் நினைவகம் அமைக்கப்பட்டுள்ளது. இதில், அருங்காட்சியகம், நூலகம், சிறுவர் விளையாட்டுப் பூங்கா உள்ளிட்டவை அமைந்துள்ளன. மேலும், அமர்ந்த நிலையில் பெரியார் சிலை நிறுவப்பட்டுள்ளது. இந்நிலையில் வைக்கத்தில் உள்ள பெரியார் நினைவிடம் மறுசீரமைக்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்திருந்தது. அதன்படி அங்கு நடைபெறும் கட்டுமானப் பணிகளை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு செய்தார். அப்பணிகள் 7 மாதங்களுக்குள் முடிவடையும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## முத்தமிழறிஞர் கலைஞர் 5 ஆம் ஆண்டு நினைவு நாள்:

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆக.7 அன்று அமைதிப் பேரணி!

### மாவட்டக் கழகத் தோழர்களுக்கு சென்னை கிழக்கு - சென்னை வடக்கு - சென்னை வடகிழக்கு - சென்னை மேற்கு - சென்னை தென்மேற்கு - சென்னை தெற்கு - மாவட்டக் கழகச் செயலாளர்கள் வேண்டுகோள்!



தலைமைசால் தலைவராக - எழுத்தாளராக - கவிஞராக சொற்பொழிவாளராக - திரைக்கதை வசனகர்த்தாவாக - இலக்கியவாதியாக - திரைப்படத் தயாரிப்பாளராக - தலைசிறந்த நிர்வாகியாக - தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக - உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும், திராவிட இயக்கத்தின் போர்வாட்களில் ஒருவராகத் தமது பொதுவாழ்வைத் தொடங்கி, பின்னர், காஞ்சி தந்த காவியத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழக வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக்கொண்ட **முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவுநாளினையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர். பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் கலந்து கொள்ளும் "அமைதிப் பேரணி", ஆகஸ்ட்7, திங்கட்கிழமை அன்று காலை 8.00 மணிக்கு சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவர்.**

அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி,

தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை,இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, நெசவாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணியினரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வாரீர் என சென்னை கிழக்கு - சென்னை வடக்கு - சென்னை வடகிழக்கு - சென்னை மேற்கு - சென்னை தென்மேற்கு - சென்னை தெற்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

-சென்னை மாவட்ட தி.மு.க.

# சஞ்சய் மிஸ்ரா: வெட்கமற்ற நீட்டிப்பு!

### 'அருஞ்சொல்' இணையதளத்தில் ஆசிரியர் சமஸ் சிறப்புக் கட்டுரை



அருஞ்சொல் இணையதள இதழில் அதன் ஆசிரியர் சமஸ் எழுதியுள்ள 'சஞ்சய் மிஸ்ரா! வெட்கமற்ற நீட்டிப்பு' என்ற தலைப்பில் வெளியான கட்டுரை வருமாறு:-

அமலாக்கத் துறை இயக்குநர் சஞ்சய் குமார் மிஸ்ராவின் பணியை நீட்டிப்பதற்காக பா.ஜ.க. எடுத்திருக்கும் விசேஷ நடவடிக்கையை மோடி அரசின் வெட்கமற்ற முன்னெடுப்பு என்றே சொல்ல வேண்டும்.

மோடி அரசின் முழுக் கையாளாகவே அமலாக்கத் துறையை மாற்றிவிட்டார் என்ற கடும் விமர்சனத்துக்குள்ளானவர் சஞ்சய் குமார் மிஸ்ரா. முன்னதாக மிஸ்ராவுக்கு அளிக்கப்பட்ட பணி நீட்டிப்பைச் சட்ட விரோதம் என்று சொல்லி தீர்ப்பளித்ததோடு, இந்த மாத இறுதிக்குள் புதிய இயக்குநரை நியமிக்கவும் உத்தரவிட்டிருந்தது உச்ச நீதிமன்றம். அதற்குப் பின்னரும், 'தேச நலன்' எனும் பெயரில் சிறப்பு நேர்வாக அவசரக் கால மனுவை தாக்கல் செய்து, நீதிமன்றத்திடம் மேலும் ஒன்றரை மாத நீட்டிப்பு வாங்கியிருக்கிறது பா.ஜ.க. அரசு.

இந்திய வருவாய் பணிகள் (ஐஆர்எஸ்), 1984 அணி அதிகாரியான மிஸ்ரா 2018இல் அமலாக்கத் துறை இயக்குநராக நியமிக்கப்பட்டார். உள்ளபடி அவரது பதவிக் காலம் 2020இல் நிறைவடைந்தது. அப்போது அவருக்கு மேலும் ஓராண்டுக்குப் பதவிக் காலத்தை அரசு நீட்டித்தது. 2021இல் அவரது பதவிக் காலம் நிறைவடைந்தபோதும், மேலும் ஓராண்டுக்கு அவரை அரசு நீட்டித்தது. இதனூடாகவே அமலாக்கத் துறை, சி.பி.ஐ. இயக்குநர்களின் பதவிக் கால வரையறையை இரண்டு ஆண்டுகள் என்பதிலிருந்து மூன்று ஆண்டுகள் என்பதாக நீட்டித்து ஓர் அவசரச் சட்டத்தை 2022இல் கொண்டு வந்தது அரசு. அதாவது, இதன் மூலம் அமலாக்கத் துறை, சி.பி.ஐ. இயக்குநர்கள் அதிகபட்சமாக 5 ஆண்டுகள் வரை பதவியில் நீடிக்க வழிவகுக்கப்பட்டது.

இத்தகு பின்னணியில்தான் 2022இல் மிஸ்ராவுக்கு மூன்றாவது முறையாக அளிக்கப்பட்ட பதவி நீட்டிப்பை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கில், இந்தப் பதவி நீட்டிப்பு செல்லாது என்று சமீபத்தில் தீர்ப்பளித்திருந்தது உச்ச நீதிமன்றம்.

அதிகம் பொதுவெளியில் முகம் காட்டாதவரான மிஸ்ரா, அமலாக்கத் துறை வரலாற்றிலேயே அதிகமான அதிகாரத்தைச் செயல்படுத்தியவர் என்று சொல்லலாம். பிற்காலத்தில், எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுவது போல், 'அமலாக்கத்துறையின் வரலாற்றிலேயே அதிகபட்ச அதிகார துஷ்பிரயோகமத்தைச் செயல்படுத்தியவர்' என்றும் மிஸ்ரா சுட்டப்படலாம்.

ஒன்றிய அரசைக் கையில் வைத்துள்ள கட்சி தன் அரசியல் எதிரிகளைப் பதம் பார்க்க அமலாக்கத் துறையைப் பயன்படுத்துவதற்கு நீண்ட வரலாறு இந்தியாவில் இருக்கிறது. ஆயினும், மோடி அரசில் குறிப்பாக மிஸ்ராவின் ஐந்தாண்டு பதவிக் காலத்தில் இந்தப் போக்கு உச்சம் தொட்டது. இந்த ஐந்தாண்டுகளில் 4,000+ வழக்குகளைத் தொடர்ந்த அமலாக்கத் துறை 3000+ சோதனைகளை நடத்தியது.

அரசியலர்கள் இந்த வேட்டையில் முக்கியமான இடம் பிடித்தனர். காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம், தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார், ஜார்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன், ஆக அமைச்சர்கள் மணீஷ் சிசோடியா, சத்யேந்தர் ஜெயின், கர்நாடக காங்கிரஸ் தலைவர் டி.கே.சிவக்குமார், தி.மு.க. அமைச்சர் செந்தில் பாலாஜி என்று எதிர்க்கட்சிகளில் நீளமான வரிசையைக் கொண்டிருக்கும் அமலாக்கத் துறையின் வழக்குப் பட்டியலில் பா.ஜ.க.வினர் பெயர்கள் மிக அரிது.

**அமலாக்கத் துறை தொடர்ந்த இத்தகு வழக்குகளில், அது குற்றத்தை நிரூபிக்கும் சதவீதம் மிகக் குறைவாக இருப்பதை நாம் இங்கு கவனிக்க வேண்டும். எனில், வழக்குகள், சோதனைகள், விசாரணைகள், வங்கிக் கணக்குகள் முடக்கம் என்று நடைமுறைகளையே தண்டனையாக்கி அதன் மூலம் சம்பந்தப்பட்டோர் செயல்பாடுகளை முடக்குவதையும் ஆட்சியாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தலைப் பரப்புவதுமே இங்கு மூல நோக்கமாக இருக்கிறது.**

அரசியல் தலைவர்கள் மட்டும் அல்லாது, மோடி அரசை விமர்சிக்கும் / எதிர்க்கும் எவர் மீதும் அலுவலர்கள் பாயும் மோசமான நிலைக்குத் துறையைக் கொண்டுவந்துவிட்டார் மிஸ்ரா என்று துறைக்குள்ளும் பொதுவெளியிலும் பெரும் பேச்சு இன்று உருவாகி இருக்கிறது. அமலாக்கத் துறையின் மதிப்பை முன்னெப்போதும் இல்லாத அளவுக்குக் குலைத்துவிட்டார் மிஸ்ரா என்றே சொல்ல வேண்டும். எதிர்காலத்தில் அமலாக்கத் துறைக்கான அதிகாரத்தை மட்டுப்படுத்த வேண்டும் என்ற சிந்தனை நோக்கியும் தேசத்தை



சமஸ்
ஆசிரியர்
'அருஞ்சொல்'
இணையதளம் இதழ்

அவர் இழுத்துச் சென்றிருக்கிறார். இத்தகைய ஒருவருக்குத்தான் 'பன்னாட்டு உறவுடன் பிணைந்த நிதி நடவடிக்கை பணிக் குழு (எஃப்.ஏ.டி.எஃப்) இந்த ஆண்டில் மேற்கொண்டு வரும் மதிப்பாய்வுப் பணிகள் எந்தவித பாதிப்புகளின்றி நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்காக எனும் காரணத்தைச் சொல்லி , 'தேச நலன்' என்ற பெயரில் நீட்டிப்பு வாங்கியிருக்கிறது மோடி அரசு.

நீட்டிப்பை வழங்கியபோதும், காட்டமான கேள்விகளை எழுப்ப உச்ச நீதிமன்றம் தவறவில்லை. "அமலாக்கத் துறையில் எஸ்.கே.மிஸ்ராவைத் தவிர மற்ற அனைத்து அதிகாரிகளும் தகுதியற்றவர்களா? எஸ்.கே. மிஸ்ரா என்ற ஒரு நபர் இல்லை என்றால், ஒட்டுமொத்த அமலாக்கத் துறையும் செயலிழந்துவிடுமா?" என்ற நீதிபதி பி.ஆர்.காவாயின் கேள்விகள் மாண்புள்ள எந்த ஆட்சியாளருக்கும் தலைக்குனிவு தரக் கூடியவை. இந்த அரசு எந்தக் கூச்சமும் அற்றது; வெட்கம் கெட்டது. அலுவலர்களையும் அப்படி ஆக்குகிறது.

**அடுத்த ஒன்றரை மாதத்தில் வேறு ஒருவர் அமலாக்கத் துறை இயக்குநர் பதவியில் அமரலாம்; அடுத்து இந்த பா.ஜ.க. ஆட்சியும் முடிவுக்கு வரலாம். ஆனால், மோடி அரசு மிஸ்ரா போன்றவர்களைக் கொண்டு அரசின் ஒவ்வொரு துறையிலும் மேற்கொண்டுள்ள சீர்குலைவுகளும், அங்கு உருவாகியுள்ள மாண்பற்ற கலாச்சாரமும் சீரமைக்கப்பட எவ்வளவு காலம் ஆகும் என்ற கேள்விதான் நம் முன்னுள்ள பெரும் அச்சுறுத்தல்.**

புலனாய்வுத் துறை, அமலாக்கத் துறை உள்ளிட்ட ஒன்றிய அரசின் கைகளில் உள்ள விசாரணை அமைப்புகளின் வடிவத்தையும் அவற்றின் அதிகாரங்களையும் கூட்டாட்சிப் பார்வையில் மறுநிர்மாணிக்கும் தேவையை மிகத் தீவிரமாக மிஸ்ரா விவகாரம் சுட்டுகிறது!

நன்றி :
அருஞ்சொல்.காம்
இணையதள இதழ்
31.7.2023

# திருடப்பட்ட கோயில் சிலைகள் எத்தனை? அவற்றை மீட்க என்ன நடவடிக்கை?

## மக்களவையில் கனிமொழி கருணாநிதி கேள்வி!



புதுடெல்லி, ஆக. 3-

தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், மக்களவை கழகக் குழுத் துணைத் தலைவருமான கனிமொழி எம்.பி. மக்களவையில ஒன்றிய கலை மற்றும் கலாச்சாரத்துறை அமைச்சரிடம் நாடாளுமன்றத்தில் எழுத்துப்பூர்வமாகசில கேள்விகளைக் கேட்டிருந்தார்.

"இந்தியாவில் இருக்கும் கோயில்களில் இருந்து இதுவரை பழமையான எத்தனை சிலைகள் திருடப்பட்டுள்ளன, எத்தனை சிலைகள் மீட்கப்பட்டுள்ளன? தமிழ்நாடு உள்ளிட்ட அனைத்து மாநிலங்களில் இருந்தும் இதுகுறித்த கடந்த பத்தாண்டுகளின் விவரம் என்ன?

கோயில்களில் சிலை திருட்டு நடப்பதை தடுப்பதற்கு ஒன்றிய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

வெளிநாடுகளில் இருந்து இன்னும் மீட்கப்படாமல் இருக்கும் சிலைகள் எத்தனை? நாடு வாரியாக அதன் விவரங்கள் என்ன?

வெளிநாடுகளில் இருக்கும் கோயில் சிலைகளை மீட்பதற்காக ஒன்றிய அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை என்ன?" ஆகிய கேள்விகளை கனிமொழி கருணாநிதி எழுத்துப்பூர்வமாக கேட்டிருந்தார்.

இக்கேள்விகளுக்கு ஒன்றிய கலை, கலாச்சாரத்துறை அமைச்சர் கிஷன் ரெட்டி ஜூலை 31ஆம் தேதி எழுத்துப்பூர்வமாக பதிலளித்தார்.

அதில், கடந்த பத்தாண்டுகளில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்து கோயில் சிலைகள் திருடப்பட்டது மற்றும் மீட்கப்பட்ட எண்ணிக்கை தொடர்பான பட்டியலை இணைத்திருந்தார்.

அதன்படி 2013 முதல் 2023 வரையிலான கடந்த பத்து ஆண்டுகளில் அதிகபட்சமாக கர்நாடக மாநிலத்தில் இருந்து 14 சிலைகள் திருடப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான் மீட்கப்பட்டுள்ளது. ஆந்திராவில் 3 சிலைகள் திருடப்பட்டு 2 மீட்கப்பட்டுள்ளன. பிகார், ஒடிசா மாநிலங்களில் இருந்து 4 சிலைகள் திருடப்பட்டுள்ளன. இது வரை அவற்றில் எதுவும் மீட்கப்படவில்லை. மேலும் தமிழ்நாட்டில் இருந்து கடந்த பத்து ஆண்டுகளில் எந்த கோயில் சிலையும் களவு போகவில்லை என்றும் அந்த பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒன்றிய கலை, கலாச்சாரத் துறை அமைச்சர் அளித்த பதிலில்,

"இந்திய தொல்லியல் துறை, சிலைகள் உள்ளிட்ட நமது பாரம்பரிய நினைவுச் சின்னங்களை பாதுகாப்பதில் உறுதியாக உள்ளது. அதன் அதிகார வரம்பிற்கு உட்பட்ட பழங்கால பொருட்களைப் பாதுகாப்பதில் தொல்லியல் துறையின் வழக்கமான ஊழியர்கள் தவிர தனியார் பாதுகாப்புப் படையினர், மாநில காவல்துறையின் ஆயுதக் காவலர்கள், மற்றும் தேவைக்கு ஏற்ப மத்திய தொழில் பாதுகாப்புப் படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஒருவேளை பழங்கால பொருட்கள் திருடப்பட்டதாக புகார் அளிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட காவல்நிலையத்தில் எஃப்.ஐ.ஆர் பதிவு செய்யப்பட்டால்... உடனடியாக லுக் அவுட் நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டு, கஸ்டம்ஸ் உள்ளிட்ட சட்ட அமலாக்க நிறுவனங்கள் உஷார் படுத்தப்பட்டு, திருடப்பட்ட பழங்காலச் சின்னங்கள் வேறு எந்த வெளிநாட்டுக்கும் சட்ட விரோதமாக ஏற்றுமதி செய்யப்படுவது தடுக்கப்படுகிறது.

பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களான மொத்தம் 31 தொல்பொருட்கள் திருடப்பட்டுள்ளன. அவற்றில் 27 இன்னும் மீட்கப்பட வேண்டும். எனினும் அவை சட்ட விரோதமாக வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக எந்த தகவலும் இல்லை. திருடிச் செல்லப்பட்ட பழங்காலச் சின்னங்களை மீட்பதற்கு அரசு உறுதி பூண்டுள்ளது.

இந்தியாவுக்கு வெளியே இது மாதிரியான நமது பழைய நினைவுச் சின்னங்கள் இருப்பதாக தகவல் கிடைக்கும்போதெல்லாம், தொல்லியல் துறை உடனடியாக சம்பந்தப்பட்ட நாடுகளின் இந்திய தூதரகங்களுடன் இந்த விஷயத்தை எடுத்துச் சென்று, அவற்றை மீட்டு கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த வகையில் நமது வெளியுறவுத் துறை மூலமாக 1976 முதல் 2023 வரை மொத்தம் 251 சிலைகள் உள்ளிட்ட பழமையான நினைவுச் சின்னங்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்த 251 இல், கடந்த 2014 முதல் 23 வரை மட்டுமே மீட்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் மொத்தம் 238 ஆகும்" என்று ஒன்றிய கலை, கலாச்சாரத் துறை அமைச்சர் கிஷன் ரெட்டி பதிலளித்துள்ளார்.



திருப்பூர் மாவட்டம், பல்லடம் ஒன்றியம், கரைப்புதூர் ஊராட்சி, அல்லாளபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' விண்ணப்பம் பதிவு மையத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் கள ஆய்வு மேற்கொண்டார். இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் சார் ஆட்சியர் ஸ்ருதன் ஜெய் நாராயணன், பொங்கலூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ஜேசிபி எஸ்.பாலுசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.